©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 6] சென்னை, வெள்ளிக்கிழமை, ஜனவரி 13, 2017
மார்கழி 29, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2047

# Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### பொதுத் துறை

**(பல்வகை)**

**டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா 17 ஜனவரி 2017 அன்று செலாவணி முறிச்சட்டத்தின்கீழ் அரசு பொது விடுமுறை நாளாக அறிவித்தல்.**

*[அரசாணை (நிலை) எண் 25, பொது (பல்வகை), 13 ஜனவரி 2017, மார்கழி 29, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047.]*

**No. II(1)/PUMIS/C/2017.**

டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 17–01–2017 (செவ்வாய்கிழமை) மட்டும் செலாவணி முறிச்சட்டம் 1881–ன்கீழ் பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. இந்த பொது விடுமுறையானது தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள், அரசினால் அமைக்கப்பட்ட வாரியங்கள் மற்றும் கழகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள், கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகள், தொழிற்துறை நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்கள் முதலியவற்றுக்கும் பொருந்தும். பிற நிறுவனங்களும் இவ்விழாவின் சிறப்பினை கருத்தில் கொண்டு தங்களது அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பொது விடுமுறை நாளாக அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2. கீழ்க்காணும் அறிவிக்கை ***தமிழ்நாடு அரசின்*** சிறப்பு அரசிதழில் வெளியிடப்படும் செலாவணி முறிச்சட்டம் 1881, பிரிவு 25–க்கு உட்பட்ட விளக்கம் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஜூன் 8, 1957–ம் ஆண்டின் அறிவிக்கை எண் 20–25–26, பொது I–ன்கீழ், டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, செவ்வாய்கிழமை 17 ஜனவரி 2017 ஆம் நாளை பொது விடுமுறை நாளாக தமிழக அரசு அறிவிக்கின்றது.

**கிரிஜா வைத்தியநாதன்,**
*தலைமைச் செயலாளர்.*



தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.